முருகப்பெருமான் துணை

**மகான் சண்டிகேசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.11.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா
ஓங்கார குடில் படைத்த தேசிகா
ஓங்கார பலம் உலகம் அடையவே
உயர் ஞானி அரங்கன் வழிகாட்டல்
2. வழிகாட்டல் சன்மார்க்கமாக இருக்க
வணங்கி உலகமக்கள் வர
அழியாமை பெறுவரெனக் கூறி
அனுகூல ஆசிதனை சண்டிகேசர் யானும்
3. யானும் சுபகிருது துலை திங்கள்
இருபானீர் திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 22 ம் நாள் 08.11.2022, செவ்வாய்கிழமை)
ஞானயுகம் அமைய உரைப்பேன்
ஞானிகளை வணங்க வேண்டி
4. வேண்டியே ஞானிகள் பூசை
வேலவன் பூசைஎன வகுத்து
தொண்டுடன் தருமம் வளர்க்க
தேசிகனார் முழுமதியில் பூசைதனை
5. பூசைதனை உலகோர் நலம்பெற
பிரணவக் குடிலில் செய்து வர
பூசை கலந்து உலக மக்கள்
பிரணவக் குடில் நோக்கி வர
6. வருகவே அவரவர் வாழ்விலும்
வரமென குருவருள் கிட்டி
முருகப்பெருமான் அருளாசியோடு
முழுமை ஞானம் அடைந்து சிறப்பர்
7. சிறப்புதரும் ஞானி அரங்கனே
சித்திகள் தரும் ஞானியாகும்
மறுப்பின்றி தருமத்திலும் உதவி
மண்ணுலகமெங்கும் தருமம் பெருக்க
8. பெருக்கவே வினைகள் விலகும்
பேதமற ஞானம் பெருகி
கருத்தாக மேல்நிலை தேறி
கடைத்தேற்றம் அரங்கனால் காணும்
9. காணவே உலகம் எங்கிலும்
கந்தவேலன் வழிபாடு பெருகி
ஞானவான்கள் படை பெருக
ஞானிகள் எனும் உயர் சக்தி

10. சக்தி மக்களிடை பரவி
சடுதி உலகம் எங்கிலும்
சக்திமிக்க ஞானவான்கள் தலைமை
சாற்றிடுவேன் உலகமெங்கிலும் அமைந்து

11. அமைந்து ஞான ஆட்சி
அரங்கன் அவதார நோக்கமாக
அமைந்து உலகம் உயர்வு பெறும்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–